# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8073068

C

1. District மாவட்டம் : திருவண்ணாமலை PS: காவல்நிலையம் திருவண்ணாமலை Year: ஆண்டு FIR No.: மு.த.அ. எண் 07/2018 Date: நாள் 10.09.2018

2. (i) Act சட்டம்: ஊ.த.த பிரிவு அலுவலகம். Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 31-08-2018 Date to நாள் வரை : 12 மற்றும் 03/09/2018 @ 1300 Hrs.
   Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10-09-2018 Time நேரம் : 0700 மணி.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.09.2018 Time நேரம் : 0700 மணி.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தேசூர் உதவிப் பொறியாளர் அலுவலகம். கிழக்கே 60 கி.மீ வடக்கு.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வந்தவாசி வட்டம் திருவண்ணாமலை மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் P. [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 28/2018 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ஒப்பந்ததாரர் திருநகர் சென்னை. (g) Address : முகவரி 300, [illegible] வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. சிவதாஸ்
   தேசூர் பாசன உதவிப் பொறியாளர், வந்தவாசி வட்டம் திருவண்ணாமலை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. [signature] 10/09/18

[signature] 10/9/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. RAJANIKANTH
Rank: நிலை Inspector of Police, No. எண் ........
VAC, Tiruvannamalai.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:-</u> திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் 10.09.2018-ம் தேதி காலை 07.10 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களின் மேல் வரைவுடன் கிடைக்கப்பெற்ற புகார் மனு பின்வருமாறு: அனுப்புநர் M.துரைமுருகன், த/பெ P.முனுசாமி, 300, குண்ணகம்பூண்டி கிராமம் மற்றும் அஞ்சல், வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை அய்யா, நான் ITI Fitter படிப்பை படித்து சென்னை T.Nagar-ல் உள்ள Schindler India PVT Ltd என்ற லிப்ட் உற்பத்தி செய்யும் கம்பெனியில் டெக்னீஷியனாக வேலை செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் வந்தவாசி தாலுக்காவிலுள்ள குண்ணகம்பூண்டி கிராமம் எனது தந்தை குண்ணகம்பூண்டி கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறார். என்னுடன் பிறந்தவர்கள் மூன்று பேர்கள். நான் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவன். என் மனைவி திருமதி.பானு அவர்கள் வன்னியகுல சத்திரிய (MBC) வகுப்பை சேர்ந்தவர். நாங்கள் இருவரும் காதலித்து கடந்த 04.11.2016-ம் தேதி சென்னை சைதாப்பேட்டையில் உள்ள கலைஞர் சமுதாய கூடத்தில் இருகுடும்பத்து சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டோம். எங்களுக்கு தற்போது நான்கு மாத ஆண் குழந்தை உள்ளது. அதன்பின்னர் கடந்த 13.10.2017-ந் தேதி சைதாப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் எங்கள் திருமணத்தை பதிவு செய்து கொண்டோம். கலப்பு திருமணம் செய்து கொண்டால் தமிழக அரசால் கலப்பு திருமணம் செய்தவர்களுக்கு பல சலுகைகள் கொடுப்பதால் மேற்படி சலுகைகளை பெற வேண்டி, நான் 02.08.2018-ந் தேதி ஆன்லைன் மூலம் கலப்பு திருமணச்சான்றிதழ் வேண்டி பதிவு செய்தேன். அந்த விண்ணப்ப எண். TN-1120180802112 என்பதாகும். நான் 30.08.2018-ந் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு சென்னையில் அலுவலகத்தில் இருந்தபோது, வந்தவாசி தாலுக்கா அலுவலகத்தில் இருந்து ஒருவர் எனக்கு போன் செய்து கலப்பு திருமணச்சான்றிதழ் வேண்டி பதிவு செய்தீர்களா என்று கேட்டார், நான் ஆமாம் என்று சொன்னதற்கு நாளை 31.08.2018-ந் தேதி கீழ்நமண்டி கிராமத்தில் அம்மா திட்டம் நடைபெறுகிறது, குண்ணகம்பூண்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தேசூர் வருவாய் ஆய்வாளர் ஆகியோர் அங்கு வருவார்கள் அவர்களிடம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை காட்டுங்கள் அவர்கள் சரிபார்ப்பார்கள் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். நான் 31.08.2018-ந் தேதி அலுவலகத்திற்கு தற்செயல் விடுப்பு எடுத்துக்கொண்டு கீழ்நமண்டி கிராமத்தில் நடைபெற்ற அம்மா திட்ட கூட்டத்திற்கு 31.08.2018-ந் தேதி பகல் 12.00 மணியளவில் சென்று குண்ணகம்பூண்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.குணா அவர்களை சந்தித்து வந்த விவரத்தை சொன்னேன், அவர் எனது ஆவணங்களை சரிபார்த்து எல்லாம் சரியாக உள்ளது, நீ போய் தேசூர் பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.முருகதாஸ் அவர்களை பார்த்து அவரிடம் ஆவணங்களை காட்டு என்று கூறி அனுப்பி வைத்தார். நான் அப்பொழுதே தேசூர் பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.முருகதாஸ் அவர்களை சந்தித்து வந்த விவரத்தை சொன்னேன், தேசூர் பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.முருகதாஸ் அவர்கள் நான் வைத்திருந்த ஆவணங்களை எல்லாம் சரிபார்த்து எல்லாம் சரியாக உள்ளது என்று சொல்லி என்னிடம் கலப்பு திருமணச்சான்றிதழ் வேண்டுமென்றால் எனக்கு ரூ.5,000/-ம்

இலஞ்சமாக தரவேண்டும், கொடுத்தால் நான் உடனே Field Enquiry முடித்து துணை வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிவிடுவேன், துணை வட்டாட்சியர் அவர்களிடம் பேசி உடன் சான்றிதழ் கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார். நான் அவரிடம் தற்பொழுது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை நான் ஏற்பாடு செய்து கொண்டு வருகிறேன் என்று சொல்லி வந்துவிட்டேன். பின்னர் மீண்டும் 03.09.2018-ந் தேதி அலுவலகத்திற்கு, தற்செயல் விடுப்பு எடுத்துக்கொண்டு அன்றே பகல் 01.00 மணியளவில் தேசூர் பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.முருகதாஸ் அவர்களை தேசூர் வருவாய் அலுவலகத்திற்கு சென்று சந்தித்தேன். அவரிடம் நாங்கள் தற்பொழுது மிகவும் ஏழ்மையில் இருக்கிறோம், அதற்காகத்தான் அரசாங்கத்திடம் சலுகை பெற கலப்பு திருமண சான்றிதழ் விண்ணப்பித்துள்ளோம், அதற்கு ரூ.5,000/-ம் இலஞ்சமாக கேட்கிறீர்கள் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன், பின்னர் சிறிது நேர யோசனைக்கு பிறகு தேசூர் பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.முருகதாஸ் அவர்கள் சரி ரூ.4,000/-ம் எடுத்துவா அதற்கு மேல் குறைக்க முடியாது என்று கராராக சொல்லி அனுப்பிவிட்டார். எனக்கு ரூ.4,000/-ம் இலஞ்சமாக கொடுத்து கலப்பு திருமணச்சான்றிதழ் பெற விருப்பமில்லை. எனவே என்னிடம் ரூ.4,000/-ம் இலஞ்சம் கேட்ட தேசூர் பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.முருகதாஸ் அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க எழுத்து மூலம் புகார் மனு தயார் செய்து கொண்டு, இன்று 10.09.2018-ம் தேதி காலை 07.00 மணிக்கு திருவண்ணாமலை காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து புகார் அளிக்கிறேன், நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு xxxxxxx (M.துரைமுருகன்) 10/09/18 இணைப்பு : 1. திருமண பதிவுச்சான்றிதழ் நகல். 2. கலப்பு திருமணச்சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்த ஒப்புகை சீட்டு நகல் (TN-1120180802112).

Inspector Tr. M. Rajanikanth

Please receive the complaint. Discreetly verify the antecedents of the accused and register a case and take up for investigation. Sd/-XXXXXX 10/9/18 (V.SARAVANAKUMAR) DSP, V&AC, Tiruvannamalai.

Sir,

Received the complaint on 10/9/18 at 07.10 hrs and a quick verification on the general reputation of the accused had made and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also checked and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 10-09-2018 at 08.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.07/18, u/s. 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to Hon'ble CJM and Special Judge, Tiruvannamalai and sent the copies to the officers concerned. Sd/-xxxxxxxxx 10/9/18 Inspector/V&AC/Tiruvannamalai.

10/9/18

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Thiruvannamalai